# தமிழ் நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
# ஈரோடு மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை
# (17.09.2016 முதல் 21.09.2016)

**அறிக்கைஎண் :075/2016** **தேதி: 16.09.2016**

**மாநிலத்தின் கடந்தவார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 31°செ முதல் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 21°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 20°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

**எதிர்பார்க்கப்படும் வானிலை: ஈரோடு (17.09.2016 முதல் 21.09.2016)**

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் ஐந்து நாட்களுக்கும் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 30 °செ முதல் 31°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 75 முதல் 78 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 59 முதல் 62 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 14 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

| தேதி | மழை (மி.மீ) | அதிகபட்ச வெப்ப நிலை (°செ) | குறைந்த பட்ச வெப்ப நிலை (°செ) | மேக மூட்டம் (ஆக்டா) | அதிகபட்ச காற்றின் ஈரப்பதம் (%) | குறைந்த பட்ச காற்றின் ஈரப்பதம் (%) | காற்றின் வேகம் (கி.மீ/ மணி) | காற்று வரும் திசை |
|---|---|---|---|---|---|---|---|---|
| 17.09.16 | 0 | 31 | 23 | 6 | 75 | 59 | 14 | தெற்கு |
| 18.09.16 | 0 | 31 | 23 | 6 | 75 | 59 | 14 | தெற்கு |
| 19.09.16 | 0 | 30 | 22 | 6 | 78 | 62 | 14 | தெற்கு |
| 20.09.16 | 0 | 30 | 22 | 6 | 78 | 62 | 14 | தெற்கு |
| 21.09.16 | 0 | 30 | 22 | 6 | 78 | 62 | 14 | தெற்கு |

**வேளாண் அறிவுரை**

- நிலவும் வறண்ட வானிலையினை பயன்படுத்தி முதிர்ந்த கார்பருவ நெல்லினை 17 முதல் 19 ம் தேதி வரை அறுவடை செய்யவும்.
- நிலவும் வறண்ட வானிலையினால் சம்பா பருவ நாற்றங்காலுக்கு நீர் பாய்ச்சவும்
- நிலவும் வறண்ட வானிலையினால் பயன்படுத்தி 30 நாட்களான குளிர்பால இறவை கம்போடியா பருத்தியில் களைஎடுக்கவும்.
- காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட கரும்பிற்கும், ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.

**குறுஞ்செய்தி**

- நிலவும் வறண்ட வானிலையினை பயன்படுத்தி முதிர்ந்த கார்பருவ நெல்லினை 17 முதல் 19 ம் தேதி வரை அறுவடை செய்யவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண் காலநிலைஆராய்ச்சிமையம்
த.நா.வே.ப.கழகம், கோவை.